
புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2054 • ஜுலை 06, 2023 • புரட்சி 23 • முழக்கம் 25 • விலை ரூ.3.00



# ஆர்.எஸ்.எஸ். பிடியில் உள்ள பெரியார் பல்கலைக்கழகத்தை மீட்க வேண்டும்

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி வலியுறுத்தல்





சேலத்தில் ஆளுநருக்கு எதிரான கருப்புக்கொடி ஆர்ப்பாட்டத்திற்கு தலைமையேற்று கழகத் தலைவர் கொளத்தூர்மணி பேசுகையில் குறிப்பிட்டதாவது:

அளுநர் என்பவருக்கு அரசியல் சட்டப்படி தனியாக இயங்குவதற்கு எந்த அதிகாரமும் இல்லை.மாநில அரசின் அறிவுரையின் படி, ஆலோசனையின் படி தான் நடந்துகொள்ள வேண்டும், ஆனால் இந்த ஆளுநரோ அல்லது திராவிட முன்னேற்றக் கழகம் போன்று எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் உள்ள ஆளுநர்களோ அப்படி நடந்துகொள்வதில்லை. அவர்கள் பாரதிய ஜனதா கட்சியின் தலைவர்களைப் போல் நடந்துகொள்கிறார்கள்.

வேந்தர் பதவி கூட கர்நாடகாவில் ஆகட்டும், குஜராத்தில் ஆகட்டும் அங்கு வேந்தராக இருப்பது அம்மாநிலத்தின் உயர்கல்வித்துறை அமைச்சர் தான்.தமிழ்நாட்டில் மட்டும் தான் ஆளுநர் என்பதாக கடந்த 15 ஆண்டுகளாக நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம், இப்படிப்பட்ட நிலையில் தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளுக்கு எதிரான செயல்களில், தமிழ்நாட்டு மக்கள் ஏற்றுக்கொண்ட இருமொழிக் கொள்கைக்கு எதிராக மும்மொழி கொள்கை, ஏற்க மறுக்கிற சமஸ்கிருத்தை சனாதன தர்மம் என்கிற வருணாஸ்ரம தர்மத்தை தொடர்ந்து ஆதரித்து பேசிக்கொண்டிருக்கிறார். அதே போல் இந்த நாட்டின் சிறந்த சிந்தனையாளர்களான வள்ளுவர், வள்ளலாரை எல்லாம் இழிவுபடுத்தி ஏதோ இந்துமத சிந்தனையாளர்கள் போல அவர் பேசிக்கொண்டிருக்கிறார். இப்படி வேண்டுமென்றே சிக்கலை தொடங்கி வைக்க வேண்டும், ஊதிப்பெருக்க வேண்டும் என்று கருதுகிற ஆளுநரை நாம் அனுமதிக்கக் கூடாது, இப்படிப்பட்ட பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதை கண்டிக்கும் விதமாக கருப்புக் கொடி காட்டும் ஆர்ப்பாட்த்தை ஏற்பாடு செய்திருக்கிறோம்.அதே போல் தமிழ்நாட்டு மக்களின் பிரதிநிதிகளான சட்டமன்றத்தில் இயற்றிய தீர்மானத்தை, சட்ட வரைவுகளுக்கு ஒப்புதல் அளிக்காமல், அதிமுக இயற்றிய சட்டத்தையே கையெழுத்து போடாமல் வைத்திருக்கிற இப்படிப்பட்ட ஆணவப் போக்கை கண்டித்துத் தான் அனைத்து இயக்கங்கள்,கட்சிகளுடன் இணைந்து எதிர்ப்பை பதிவு செய்வதற்கு தான் இந்த ஆர்பாட்டம்.

பின்னர் செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்த கழகத் தலைவர் ஆளுநர் ஆர்..எஸ்.எஸ்.காரர்களை, பிற்போக்குவாதிகளைத்தான் சேலம் பல்கலைக்கழக பதிவாளராக நியமித்துக்கொண்டிருக்கிறார். பெரியசாமி என்ற தகுதியில்லாத தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் நியமிக்கப் பட்டிருக்கிறார்,பதிவாளராக தொடர்ச்சியாக ஆறாண்டுகள் ஒருவரே பொறுப்பு பதவியாகவே இருக்கிறார், அந்த பொறுப்பிற்கு இன்னும்

*தொடர்ச்சி 3 ஆம் பக்கம்*

## பெண்கள், தலித் - பழங்குடியினருக்கு அர்ச்சகர் பதவிகள் :

# காங்கிரஸ் ஆட்சியின் மகத்தான சாதனை

அனைத்து ஜாதியினருக்கும் ஆண்டவரிடம் நெருங்கி அர்ச்சகர் தொழிலை செய்யும் உரிமை வேண்டும் என்று தமிழ்நாட்டில் எழுந்த குரல் இன்றைக்கு வடமாநிலங்களிலும் எதிரொலிக்கத் தொடங்கியிருக்கிறது. ராஜஸ்தான் மாநிலத்தின், அம்மாநில காங்கிரஸ் கட்சியினுடைய முதல்வர் அசோக் கெலட் மிகப்பெரும் சமூகப் புரட்சி ஒன்றை செய்திருக்கிறார். ராஜஸ்தானில் தேவஸ்தான் என்னும் பெயரில் அறநிலையத்துறை அங்கு செயல்படுகிறது. கோவில் நிர்வாகங்கள் இந்த தேவஸ்தான் கட்டுப்பாட்டில்தான் இருக்கின்றன. இதில் அர்ச்சகர் பதவிக்கான நியமனத்திற்கான விண்ணப்பங்கள் 2014 ஆம் ஆண்டு கோரப்பட்டன. ஒன்பது வருடங்களுக்குப்பின் 65 அர்ச்சகர்கள் நியமிக்கப்பட்டார்கள். அதற்கப்பிறகு தற்போது காங்கிரஸ் ஆட்சி 17 அர்ச்சகர்களை நியமித்து இருக்கிறது.

இதில் குறிப்பிடத்தக்க சிறப்பு என்று சொன்னால், அந்த 17 அர்ச்சகர்களில் 8 பேர் பெண்கள் தலித் பழங்குடி மற்றும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதுதான். பெண்களும் அர்ச்சகர் ஆக முடியும் என்பதை ராஜஸ்தான் மாநில ஆட்சி செய்துகாட்டி இருக்கிறது. தலித் பழங்குடி சமூகத்தைச் சார்ந்தவர்களும் அர்ச்சகர் ஆகியிருக்கிறார்கள். இதற்கு அம்மாநில பார்ப்பனர்களிடம் இருந்து கடுமையான எதிர்ப்புகள் உருவாகியிருக்கிறது. சர்வ பிராமண மகாசபையின் தலைவரான முனேஷ் சர்மா இந்த உத்தரவை வாபஸ் பெறாவிட்டால் மாநிலம் முழுவதும் பெரிய அளவில் போராட்டம் நடத்துவோம் என்று மிரட்டி இருக்கிறார்.

பார்ப்பனர்களின் மற்றொரு அமைப்பான விப்ரா பவுண்டேஷன் என்னும் அமைப்பு ராஜஸ்தான் ஆளுநர் கல்ராஜ் மிஸ்ராவை சந்தித்து இது தொடர்பாக புகார் மனு அளிக்கப் போவதாக கூறியிருக்கிறார்.

இதற்கெல்லாம் ராஜஸ்தான் முதல்வர் அசோக் கெலட் பணிந்து போகத் தயாரில்லை, தெளிவாக விளக்கம் அளித்திருக்கிறார். அரசு விதிமுறைகளின்படி சமஸ்கிருதம் அறிந்தவர்களை அர்ச்சகர்கள் ஆக்கியிருக்கிறோம். சமஸ்கிருதம் அறிந்தவர்கள் பிராமணர்கள் அல்லாதவர்களும் இருக்கிறார்கள், பெண்களும் இருக்கிறார்கள் எனவே அவர்களை அர்ச்சகர்கள் ஆக்கியிருக்கிறோம். இதில் என்ன தவறு என்ற கேள்வியை அவர் எழுப்பியிருக்கிறார்.

ராஜஸ்தானில் அரசர்களின் ஆட்சிகாலத்தில் ஆம்பர் கோட்டையில் ஒரு துர்கா கோவில் இருந்திருக்கிறது. அங்கே ஒரு பெண் அர்ச்சகர் இருந்திருக்கிறார். ஆனால், தலித் சமுதாயத்தில் இதுவரை யாரும் அர்ச்சகராக ஆக்கப்படவில்லை. இப்போது ராஜஸ்தான் காங்கிரஸ் ஆட்சி தலித் மக்களையும், பெண்களையும் அர்ச்சகர்கள் ஆக்கி ஒரு பெரும் புரட்சியை செய்து முடித்து இருக்கிறது. ராஜஸ்தான் ஆட்சியை பாராட்டுவோம்.

## தலையங்கம்

# தீட்சிதர்களின் அடாவடி

தில்லை தீட்சிதர்கள் அறநிலயத்துறைக்கு சவால் விட்டு வருகிறார்கள், கோயிலில் 'ஆதி திருமஞ்சனம் உற்சவம்' நடக்கும் போது சிற்றம்பல மேடையில் நாங்கள் மட்டுமே ஏற முடியும் ஏனைய பக்தர்களுக்கு அந்த உரிமை இல்லையென்று அறிவிப்பு பலகை ஒன்றை எழுதி மாட்டினார்கள். அறநிலையத்துறை அதிகாரிகள் இந்த பலகையை அகற்றி சிற்றம்பல மேடையில் ஏறி தரிசனம் செய்ததோடு பக்தர்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டது. வன்முறையில் இறங்கிய தீட்சிதர்கள் இப்போது நீதிமன்றம் சென்றிருக்கிறார்கள். சிற்றம்பல மேடை கோயில் கற்பகிரமல்ல, இங்கு பக்தர்கள் குறிப்பிட்ட திருவிழா காலங்களில் சாமி தரிசனம் செய்யக்கூடாது என்பது தீண்டாமைக் குற்றமாகும். ஏனைய காலங்களில் வழிபடும் உரிமை இருக்கும் போது திருவிழாவின் போது மட்டும் அனுமதி மறுப்பது ஏன்?

இந்துமத 'பார்ப்பன அகராதியில் பழக்கவழக்கம் என்ற சொல் மதத் தீண்டாமையை நியாயப்படுத்த' பயன்படுத்தப்படுகிறது, இதற்கு அரசியல் சட்டமும் ஏற்பு வழங்கியுள்ளது. பொது சிவில் சட்டம் கொண்டுவர துடிக்கும் ஒன்றிய ஆட்சி இந்துமத்திற்க்கு உள்ளேயே அனைவருக்குமான பொது சிவில் உரிமைகளை முதலில் கொண்டுவர வேண்டும். சட்டங்களில் நுழைக்கப்பட்ட 'பழக்கவழக்கம்' 'மதச் சுதந்திர அடிப்படை உரிமை' போன்ற பிரிவுகளை நீக்க வேண்டும். ஜாதியைப் பாதுகாக்கும் உரிமைச் சட்டத்தில் இருந்து நீக்கும் போது தான் அனைத்து இந்துக்களும் பொது சிவில் சமூகமாக மாற்றப்படுவார்கள். மாறாக ஜாதியக் கட்டமைப்புக்குள் இருக்கும் வரை ஏற்றத்தாழ்வுக்குரிய சமூகமாகவே இந்து சமூகம் இருக்கும். பொது சிவில் சட்டத்தைக் கொண்டு வரத் துடிக்கும் அதே பா.ஜ.க. தான் தில்லைக் கோயிலில் தீட்சிதர்கள் திணிக்கும் தீண்டாமைக்கு ஆதரவாக போராடுகிறது. இது இரட்டை வேடம்.

சிற்றம்பல மேடையில் தேவாரம் உள்ளிட்ட தமிழ்த் திருமுறைகளை தொன்றுதொட்டுப் பாடும் உரிமை தீட்சிதர்களுக்கு மட்டும் தான் உண்டு என்ற வாதத்தில் துளியும் உண்மையில்லை. தேவாரம் பாடியதே தில்லைக் கோயில் சைவ சமய பரப்புரையாளர்களான சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரமூர்த்தி மற்றும் மாணிக்கவாசகர் ஆகியோர் தான். இவர்கள் தமிழில் பாடிய ஓலைச்சுவடிகளை தீட்சத பார்ப்பனர்கள் கோயிலுக்குள்ளேயே ஒரு அறையில் பூட்டி வைத்து சுவடிகளை கரையான் அரிக்குமாறு செய்துவிட்டனர், ராஜராஜசோழன் இந்த திருமுறைகளை தொகுக்க விரும்பி தீட்சிதர்களிடம் நேரில் சென்று கேட்டான், அதற்கு நான்கு சமயத் தலைவர்களும் தங்களிடம் நேரில் வந்தால் தான் தருவோம் என்று தீட்சிதர்கள் அடம்பிடித்தனர். இறந்தவர்கள் எப்படி உயிருடன் வருவார்கள்? ராஜராஜ சோழன் இந்த நான்கு சமயப் பரப்புரையாளர்களின் சிலைகளை செய்து அதை தீட்சிதர்களிடம் காட்டி தேவார சுவடிகளை தருமாறுக் கேட்டபோது இது வெறும் சிலைகள் தானே என்று தீட்சதர்கள் கூறிவிட்டனர். அப்படியானால் நடராஜனும் ஒரு சிலை தானே என்று கேட்ட ராஜராஜசோழன் பூட்டிய அறையின் கதவை உடைத்து உள்ளே நுழைந்து எஞ்சிய ஓலைச்சுவடிகளை மீட்டான், நம்பியாண்டார் நம்பி என்பவரிடம் அவைகளை தொகுக்கச் சொன்னான், தேவாரப் பாடல்களே அதற்குப் பிறகுதான் வெளியே வந்தன. ராஜராஜ சோழன் இதை மீட்காவிட்டால் அந்த பாடல்களே உலகிற்கு தெரியாமல் போயிருக்கும்.

இப்படி தொகுக்கப்பட்டதற்கு பிறகு தானே சிற்றம்பல மேடையில் பாடியிருக்க முடியும் ? ஆனால் கோயில் தோன்றிய காலத்திலிருந்தே சிற்றம்பல மேடையில் தீட்சிதர்கள் தான் தேவாரம் பாடி வந்தார்கள் என்பது உண்மைக்கு மாறானது. அறநிலையத்துறை இதில் மேற்கொண்டுள்ள உறுதியான நடவடிக்கை பாரட்டிற்குரியது, பார்ப்பனியம் தன்னுடைய கோரமுகத்தை இந்த நூற்றாண்டிலும் இப்படி வெளிக்காட்டிக் கொண்டிருக்கும் போது கடந்த காலங்களில் இதன் கோரத்தாண்டவம் எப்படி இருந்திருக்கும் என்பதை இளைய தலைமுறை சிந்திக்க வேண்டும்.

## வினா விடை

**பொது சிவில் சட்டம் கொண்டுவருவோம் - மோடி**

ஆனா, கிரிமினல் சட்டம் மட்டும் 'பொது' இல்லை பாஜகவினர் என்ன குற்றம் செய்தாலும் விதிவிலக்கு

**அயோத்தியில் ராமன் கோயில் பாதுகாப்புக்கு 38 கோடியில் மாநில அரசு திட்டம் - செய்தி**

அப்படியே மறந்திடாம அனுமார் படை ஒன்றையும் துப்பாக்கியோடு நிறுத்திடுங்க

**ஜனநாயகம் எங்கள் ஆன்மா, இரத்தம், மரபணுவுடன் இணைந்து நிற்கிறது - அமெரிக்காவில் மோடி**

ஆனால் ஜன்நாயகக் கொலை என்பது எங்கள் அரசியல் சித்தாந்தம், அதிகாரத்தோடு பின்னிப் பிணைந்து நிற்கிறது

**பாஜக சலவை இயந்திரத்தில் ஊழல் பேர்வழிகள் தூய்மையாக்க ப்படுவார்கள் - காங்கிரஸ் விமர்சனம்**

அமலாக்கத்துறை அந்த நபர்களை இயந்திரத்தில் போடும், அமித்ஷாவும் மோடியும் திறமையாக இயக்கி சில நொடிகளில் தூய்மையாக்கிவிடுவார்கள் பலே பேர்வழிகள்!

# மாமன்னன் – ஒரு பார்வை



தொடர்ந்து சாதிக்கு எதிரான திரைப்படங்களை வழங்கிவரும் இயக்குநர் மாரி செல்வராஜ். இப்போது மாமன்னன் திரைப்படத்தை மக்களுக்கு சமர்ப்பித்து இருக்கிறார். சமகால அரசியலில் ஜாதியின் செல்வாக்கை இந்தப்படம் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. பத்து ஆண்டு காலம் சட்டமன்ற உறுப்பினராக ரிசர்வ் தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டவர் வடிவேலு. ஆனால் தன்னுடைய அதிகாரத்தை அவர் செலுத்தாமல் ஊரில் கலவரம் வந்துவிடக்கூடாது என்பதற்காக கட்சியில் மாவட்ட செயலாளர் சாதி வெறியர் ஒருவருக்கு பணிந்து போகிற ஒருவராகத்தான் இருக்கிறார். மகன் உதயநிதி ஸ்டாலின் இதில் கருத்து மாறுபாட்டோடு தந்தையிடம் பேசுவதையே நிறுத்திக்கொள்கிறார். பிறகு சமூகத்தில் நடக்கின்ற சாதிய ஒடுக்குமுறைகள் வடிவேலு கண்களை திறக்கச் செய்கின்றன. மகனின் பக்கம் உள்ள நியாயத்தை உணர்ந்து மகனோடு போர்க்களத்திற்கு வருகிறார்.

படம் முழுதும் அழுத்தமான காட்சிகள் சாதி வெறிக்கு எதிராக படமாக்கப்பட்டு இருக்கின்றன. ஊர்ப் பொதுக்கிணற்றில் பன்றி மேய்க்கும் சிறுவர்கள் குளித்துக்கொண்டு இருக்கிறார்கள் என்ற செய்தி கேட்டு ஊரில் உள்ள பல மூத்த தலைமுறையைச் சேர்ந்த சாதி வெறியர்கள் கல்லால் அடித்தே அந்த சிறுவர்களை கொல்லும் காட்சியாக இருந்தாலும் சரி, மாவட்ட செயலாளராக இருக்கிற சாதி வெறியர் தன்னுடைய எம்எல்ஏ தந்தைக்கு இருக்கை அளிக்காமல் நிற்க வைத்து அவர் அவமதிக்கும் போது உட்கார வைப்பதற்கு அவர் போராடுகிற சுயமரியாதை போராட்டமாக இருந்தாலும் சரி பல்வேறு காட்சிகள் உள்ளத்தை நெகிழச் செய்கின்றன.

இந்தப் படத்தில் மய்யமான கருத்து மிகவும் சிறப்பானது, தலித், தலித் அல்லாதவர் பகையை அது நிரந்தரமானது என்பதை உறுதியாக்குகின்ற பல படங்கள் வந்து கொண்டிருக்கிற ஒரு சூழலில் அந்த பகை முரண்பாட்டில் நிகழ்கிற மாற்றங்களைப் பேசுகிறது இந்த திரைப்படம். இளைய தலைமுறையை பழைய தலைமுறையிடம் இருந்து மாறுபட்டு முற்போக்கு சிந்தனையுடன் வலம் வருகிறது. சாதி ஆதிக்கவாதிகளை எதிர்த்து அவர்கள் சொல்வதை அப்படியே கேட்க மறுக்கின்ற இளையதலைமுறை ஒன்றும் உருவாகி வருகிறது. அதேபோல் பாதிக்கப்படுகின்ற தலித் சமூகத்தினரிடமிருந்து ஆண்டைகளுக்கு துணைபோகிற துரோகமும் நடந்துகொண்டு இருக்கிறது என்று இரண்டு பக்கங்களிலும் இருக்கின்ற கள எதார்த்தத்தை மிக நுட்பமாக அவர் வெளிக்கொண்டு வந்திருப்பதோடு சில நேரங்களில் வன்முறைகள் தவிர்க்கப்படாதது என்பதை வலியுறுத்தினாலும் கூட வன்முறையும் தாண்டி சமூக விழிப்புணர்வும், மக்களிடம் கொண்டு செல்கின்ற கருத்துகள் மிக முக்கியமானவை. ஜனநாயக ரீதியான போராட்டங்களும், உரையாடல்களும் இதற்கு ஜாதி எதிர்ப்பு பரப்புரைகளும் அவசியம் என்ற கருத்தை மிக அழுத்தமாக இயக்குனர் பதிவு செய்திருக்கிறார்.

ஒரு இடத்தில் மாவட்டச் செயலாளராக இருக்கின்ற ஜாதி ஆதிக்கவாதி பேசுகிறார்... உன்னுடைய தந்தையை நான் நிற்க வைத்துப் பேசுவது என்னுடைய அடையாளம்... உன்னை உட்காரச் சொல்வது என்னுடைய அரசியல் என்று அவர் கூறுகிறார். இன்னொரு இடத்தில் உனக்கு மேலானவருடன் பணிந்து போவது தவறில்லை, உனக்கு சமமானவருடன் பணிந்து போவது தவறில்லை, ஆனால் உனக்கு கீழானவரிடம் பணிந்து போவதைவிட சாவதே மேல் என்று என் தந்தை கூறியிருக்கிறார் என்ற கூர்மையான வசனம் வருகிறது. வர்ணாசிரம கட்டமைப்பில் மேல், கீழ் அடுக்குகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை இந்த வசனம் படம் பிடித்துக் காட்டுகிறது.

ஆக மூத்த தலைமுறை சாதி வெறியோடு இருந்தாலும் இளைய தலைமுறை அதிலிருந்து மாறுபட்டு சிந்திக்கத் தொடங்கி இருக்கிறது என்ற கருத்தை மிகவும் நேர்மையோடு பதிவு செய்திருக்கிற இயக்குநரை பாரட்ட வேண்டும். இசை படத்திற்கு வலுவைச் சேர்க்கிறது. ஏ.ஆர்.ரகுமான் காட்சிக்கு உயிரூட்டிக் கொண்டிருக்கிறார். நடிப்பில் வடிவேலாக இருந்தாலும் சரி, பகத் பாசில் ஆக இருந்தாலும் சரி, உதயநிதி ஸ்டாலினாக இருந்தாலும் சரி மிகச் சிறந்த நடிப்பை படத்திற்கு வழங்கி இருக்கிறார்கள். இந்தப் படத்தை ஒரு திரைப்பட விமர்சனம் என்று பார்ப்பதை விட சமூகத்திற்கு தேவையான கருத்துளை சுமந்து வருகின்ற சமூகப் பொறுப்போடுதான் அணுக வேண்டும். அந்த வகையிலே இது வரவேற்க வேண்டிய ஒரு படம். பல்வேறு கூட்டங்கள் கருத்தரங்கள் செய்ய வேண்டிய பணியை இந்த ஒரு திரைப்படத்தின் மூலம் மக்களிடம் விழிப்புணர்வு உண்டாக்க முடியும் என்பதை நிரூபித்திருக்கிறது. மாமன்னன் படக்குழுவினருக்கு நம்முடைய மனமார்ந்த பாரட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறோம். இப்படி ஒரு திரைப்படத்தில் துணிவோடு விரும்பி நடிக்க முன்வந்திருப்பதற்கு உதயநிதி ஸ்டாலினை நிச்சயம் பாராட்ட வேண்டும்.

# இட ஒதுக்கீட்டை பகிர்ந்தளித்தவர் கலைஞர்

*55. பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் என்ற இந்தியாவில் வேறெந்த மாநிலத்திலும் இல்லாத புதுமையான திட்டத்தையும் கொண்டுவந்தார்.*

*56. உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33% இட ஒதுக்கீடு, மருத்துவம் மற்றும் பொறியியல் சேர்க்கைக்கான ஒற்றைச் சாளர அமைப்பு முறை என முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களை நிறைவேற்றினார். மெட்ராஸ் மாநகர் சென்னையாக பெயர் மாற்றப்பட்டதும் அப்போதுதான்.*

*57. சாலைகள், பாலங்கள் கட்டமைப்பு, கிராமங்களில் கான்கிரீட் சாலைகள், புதிய தொழில் கொள்கை, ஆரம்ப சுகாதார நிலையங்கள், மினி பேருந்துகள், நீர்நிலைகளை தூர்வாருதல் என தமிழ்நாட்டின் கட்டமைப்புகளை பலப்படுத்தும் பல திட்டங்களை செயல்படுத்தினார் கலைஞர்.*



*58. குமரிக்கடலில் திருவள்ளுவருக்கு 133 அடியில் பிரமாண்ட சிலை, மதுரை உயர்நீதிமன்றக் கிளை, கோயம்பேடு பேருந்து நிலையம் கட்டுமானம் போன்றவையும் அந்த சமயத்தில்தான் மேற்கொள்ளப்பட்டது.*

*59. உலகமயமாக்கலின் வேகத்துக்கு ஈடுகொடுத்து கணினி சார்ந்த படிப்புகளையும், தொழில்களையும் விரிவுபடுத்தினார் கலைஞர். 2000-ம் ஆண்டில் சென்னையில் டைடல் பார்க்கை திறந்துவைத்தார்.*

*60. திமுக ஆட்சியின் 5 ஆண்டுகாலப் பணிகள், ஜெயலலிதான் முந்தைய ஆட்சி மீதான ஊழல் குற்றச்சாட்டுக்களால் மீண்டும் 2001 சட்டமன்றத் தேர்தலில் திமுக எளிதாக வென்றுவிடும் என்றே கலைஞர் எண்ணியிருந்தார். ஆனால் அதிமுக ஆட்சியைக் கைப்பற்றியது. ஜெயலலிதா 2-வது முறையாக முதல்வரானார்.*

*61. ஜெயலலிதா ஆட்சிக்கு வந்த சில நாட்களிலேயே கருணாநிதி கைது செய்யப்பட்டார். சென்னையில் மேம்பாலங்கள் கட்டியதில் ஊழல் நடந்ததாக ஒரு புகார் அளிக்கப்பட்டு, அதன்பேரில் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டு, இரவு நேரத்தில் வீடு புகுந்து கலைஞரை போலீசார் தூக்கிச் சென்றனர். அரசியல் ரீதியாக மிகக் கடும் விமர்சனங்களை இது ஏற்படுத்தியது. பழிவாங்கும் இந்த நடவடிக்கையில் வழக்கு விசாரணைக்கு வரவேவில்லை.*

*62. கலைஞர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு 2 வாரங்கள் நீதிமன்ற காவலில் வைக்க உத்தரவிடப்பட்டது. முன்னதாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்ட கலைஞரிடம் பத்திரிகையாளர் ஒருவர் ஒரு நோட்டுப் புத்தகத்தையும், பேனாவையும் நீட்டினார். அநீதி வீழும்; அறம் வெல்லும் என அதில் எழுதினார் கலைஞர். அந்த வாசகம் இன்றளவிலும் பிரபலமானது.*

கலைஞர் 100
1924 - 2023

*63. 2003-ல் பாஜக கூட்டணியில் இருந்து திமுக வெளியேறியது. பாஜகவிற்கு எதிரான காங்கிரஸ் அணியை பலப்படுத்துவதில் மிக முக்கிய சக்தியாக கலைஞர் விளங்கினார். அடுத்த 10 ஆண்டுகள் தொடர்ச்சியாக இந்தியாவை ஆளும் வாய்ப்பைப் பெற்றது காங்கிரஸ். 2008 ஈழப்போர் இறுதிக்கட்டம் வரை இந்த கூட்டணி எந்த சிக்கலும் இன்றி தொடர்ந்தது. மீண்டும் 2006-ல் திமுக கூட்டணி வெற்றி பெற்று கலைஞர் முதலமைச்சரானவுடன் தேர்தல் வாக்குறுதியில் கூறியபடி, ரேசனில் ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்கினார். கூட்டுறவுக் கடன்களை தள்ளுபடி செய்தார். சத்துணவில் முட்டை சேர்த்தார்.*

*64. இலவச வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகள் வழங்கப்பட்டு மலைக் கிராமங்களிலும் தொலைக்காட்சி இல்லாத வீடு இல்லை என்ற நிலையை ஏற்படுத்தினார். இத்திட்டத்தால் தமிழ்நாட்டில் மக்கள் செய்திகளை உள்வாங்கும் விகிதம் அதிகரித்திருப்பதாக அப்போது பல புள்ளி விவரங்களும் வெளியாகின.*

*65. 2006-11 ஆட்சிக்காலத்தில்தான் அனைத்து ஜாதி அர்ச்சகர் சட்டத்தையும் கலைஞர் நிறைவேற்றினார். அந்த சட்டத்தின் கீழ்தான் 2022-ம் ஆண்டில் நியமனங்களை பிறப்பித்தார் தற்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலின்.*

*66. தனியார் பள்ளிகளில் கல்வி கட்டணத்திற்கு வரம்பு, சமச்சீர் கல்வி, நுழைவுத்தேர்வுகள் ரத்து என கல்வி ரீதியாகவும் 2006 முதல் 2011 வரையிலான ஆட்சியில் பல முக்கியமான முடிவுகளை கலைஞர் எடுத்தார். அருந்ததியர்களுக்கு 3% உள் இடஒதுக்கீடு வழங்கப்பட்டதும் அப்போதுதான்.*

*67. 2007-க்கு பிறகு பல்வேறு தனது பொதுவாழ்வில் கண்டிராத பல்வேறு நெருக்கடிகளையும், துன்பியல் சம்பவங்களையும் கலைஞர் எதிர்கொள்ள நேர்ந்தது. ஈழப் போரின் இறுதிகட்டம் உணர்வுப் பூர்வ சிக்கலாக மாறியது. நிர்வாகிகளின் செயல்பாடுகளும் அதிருப்திகளை சம்பாதித்துக் கொடுத்தன. ஆயினும் 2009 நாடாளுமன்றத் தேர்தலில் திமுக கூட்டணியே வெற்றி பெற்றது.*

*68. 2009 நாடாளுமன்றத் தேர்தல் வெற்றி 2011-ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் நீடிக்கவில்லை. அந்தத் தேர்தலில் காங்கிரஸுக்கு எப்படி 63 இடங்களை கலைஞர் ஒதுக்கினார் என்பது இன்றளவிலும் விமர்சகர்கள் வைக்கும் கேள்வி.*

*69. கட்சி நிர்வாகத்தை சீர்செய்ய வேண்டிய நிலைமை கலைஞருக்கு ஏற்பட்டது. பல்வேறு காரணங்களால் மு.க.அழகிரி திமுகவில் இருந்து நீக்கப்பட்டார். நீண்ட சட்டப் போரட்டத்தால் 2-ஜி வழக்கில் இருந்து திமுக 2017 டிசம்பரில் விடுவிக்கப்பட்டது. இருந்தாலும் அதற்காக பெரிய விலையை கருணாநிதியும், திமுகவும் கொடுக்க நேர்ந்தது.*

*70. 2011-க்கு பிறகு கலைஞர் மீண்டும் ஆட்சிக்கு வரவில்லை என்றாலும் அவர் பெயரில் அறிக்கையோ, செய்தியோ இல்லாத நாள் இல்லை என்ற நிலைதான் இருந்தது. ஆனாலும் மரணப்படுக்கைக்கு செல்லும் வரை அவரின் அரசியல் பணிகள் ஓயவே இல்லை.*

*71. எம்.ஜி.ஆரின் அரசியல் எழுச்சி, ராஜீவ் படுகொலை, வைகோவின் பிளவு என பலமுறை கலைஞர் சரிவுகளைக் கண்டிருந்தாலும் பீனிக்ஸ் பறவைபோல ஒவ்வொருமுறையும் எழுந்துகொண்டே இருந்தார். 2011-க்குப் பிறகு முதுமை அவரை முழுமையாக முடக்கிவிட்டது. 2018 ஆகஸ்ட் 8-ல் தனது 95-வது வயதில் கலைஞர் மறைந்தார்.*

*72. அண்ணா, பெரியார், ராஜாஜி, காமராசர், எம்ஜிஆர், ஜெயலலிதா வரை கலைஞர் வாழ்ந்த காலத்தில் மறைந்த தலைவர்கள் ஏராளம். அவர்களுக்கு கலைஞர் எழுதிய இரங்கற்பாவும் மிக முக்கியமானது. எல்லோருக்கும் இரங்கற்பா எழுதிய கலைஞர், எனக்கு மட்டும் எழுத காத்திருக்காமல் போய்விட்டாரே கண்ணீர் விட்டார் அன்பழகன்*

*73. கலைஞரின் இறுதி ஊர்வலகத்தில் லட்சக்கணக்கானோர் பங்கேற்றனர். வாழ்நாள் முழுவதும் இடஒதுக்கீட்டு உரிமைகளுக்கு போராடியவர்,சட்டப் போராட்டம் நடத்தியவர், ஒவ்வொரு சமூகத்திற்கும் பார்த்துப் பார்த்து இடஒதுக்கீட்டை வழங்கியவர் கலைஞர். கடைசியில் மெரினாவில் அண்ணாவுக்கு அருகில் அவருக்கான இடத்தையும் அப்படி சட்டப் போராட்டம் நடத்திதான் பெற்றார்.*

**தொடரும்**

---

*முதல் பக்கத் தொடர்ச்சி*

நியமனம் செய்யவே இல்லை. ஏனென்றால் அவர்களுடைய ஆட்களை வைத்துக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு போக்கை உயர்க்கல்வித்துறை அமைச்சர் அக்கறையோடு பார்த்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

ஆட்சிக் குழுவில் ஆறு பேர் அரசியல் பிரதிநிதிகள் இருக்கிறார்கள், அதேபோல் இரண்டு பேர் எம்.பி.சி, எஸ்.சி. எஸ்.டி பிரதிநிதிகள் இருக்கிறார்கள், 21 பேரில் 8 பேர் அரசியல் பிரதிநிதிகள் இருக்கிறார்கள், இன்னும் மூன்று பேர் ஆதரவாக இருந்தால் போதும், எனவே அப்படிப்பட்ட ஆதரவைத் திரட்டி பல்கலைக்கழத்தை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரவேண்டும்,

பெரியார், அம்பேத்கர் படிப்பு வட்டம் தொடங்க கூடாது என்று சொன்ன ஐஐடி இயக்குநர் பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டுள்ளார், இப்படிப்பட்ட மனிதர்களை ஊக்குவிப்பதும், தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு எதிராக இருப்பதும் தொடர்ச்சியாக நடந்து கொண்டிருக்கிறது.

சனாதன பரப்புரையாளர் தமிழ்நாட்டு ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எதிராக “ஆளுநரின் அத்துமீறல் எதிர்ப்பு கூட்டமைப்பின்” சார்பில் சேலத்தில் கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம் 28.06.2023 அன்று நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற தோழர்களை காவல்துறை கைது செய்தது. கருப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற 260 தோழர்கள் கைது செய்யப்பட்டு தனியார் திருமண மண்டபத்தில் அடைக்கப்பட்டனர்.

தோழர்கள் அடைக்கப்பட்டு இருந்த மண்டபத்தில் ஆளுநரின் அத்துமீறல்களுக்கு எதிரான கூட்டமைப்பில் உள்ள பல்வேறு தோழமை அமைப்புகளின் பொறுப்பாளர்கள் ஆர்.என்.ரவியின் அத்துமீறல் போக்கு குறித்தும் ஒன்றிய அரசின் தற்போதைய சமூக நீதிக்கு எதிரான நடவடிக்கைகளையும், வரும் பாராளுமன்ற தேர்தலில் ஜனநாயக சக்திகள் அனைத்தும் பாசிச பாஜகவுக்கு எதிராக திரள வேண்டிய அவசியம் குறித்தும் கூடியிருந்த தோழர்கள் மத்தியில் தங்கள் கருத்துக்களை எடுத்துரைத்தார்கள்.

மாலை 5 மணியளவில் கைது செய்யப்பட்டு மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த தோழர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# சாதியப் பாகுபாடு அனைத்துக் கட்சிகளிலும் இருக்கிறது

# பா.இரஞ்சித்துக்கு உதயநிதி ஸ்டாலின் பதில்

இயக்குநர் பா.ரஞ்சித் தனது ட்விட்டர் பக்கத்தில், 'மாமன்னன்' திரைப்படம், பட்டியலின மக்களின் சட்டமன்ற உறுப்பினர்கள், சமூக நீதியை கொள்கையாக கொண்டுள்ள அரசியல் கட்சியாக இருந்தாலும், கட்சியில் உள்ள மற்ற உயர் வகுப்பினர் சாதி அடிப்படையில் ஏற்றத்தாழ்வுகளை அவர்களுக்கு எப்படி நிகழ்த்துகிறார்கள் என்பதை அப்பட்டமாக காட்சிப்படுத்தி இருக்கிறது. உண்மையாகவே தனித்தொகுதி எம்எல்ஏக்களுக்கு அதிகாரம் என்னவாக இருக்கிறது? ஏன் பட்டியலின மக்களின் பிரச்சனைகளுக்கு குரல் கொடுக்க பயப்படுகிறார்கள்?

சமூகநீதி பேசுகிற கட்சிகளில் இருந்தும் ஊமைகளாக இருப்பதற்கான காரணம் என்ன? அவர்களுக்கான அங்கீகாரமும், அதிகாரமும் பிரதிநிதித்துவமும் சரியாக தரப்படுகிறதா? என்பதற்கான சான்று 'மாமன்னன்'. உண்மையாகவே பெரும் பாராட்டுகுரியவர் நடிகர், தயாரிப்பாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின். திமுகவில் இன்றுவரை பெரும் சவாலாக இருக்கும் சாதி பாகுபாட்டை அவரும் அறிந்தே இருப்பார், அதை களைவதற்கான வேலையை இத்திரைப்படத்தின் வாயிலாக ஆரம்பிப்பார் என்று நம்பிக்கை கொள்வோம். பொட்டி பகடை, வீராயி, ஒண்டிவீரன் என அருந்ததிய மக்களின் வாழ்க்கையின் ஊடாக மாமன்னனை உருவாக்கி பெரும் வெற்றியை பெற்ற மாரி செல்வராஜ், வடிவேலு மற்றும் குழுவினர் அனைவருக்கும் வாழ்த்துகள்" என பதிவிட்டிருந்தார்.

அவருக்கு நன்றி தெரிவித்து பதிலளித்துள்ள உதயநிதி ஸ்டாலின் கூறியிருப்பது : "மாமன்னன்' திரைப்படத்தைப் பாராட்டிய இயக்குநர் சகோதரர் பா.ரஞ்சித்துக்கு நன்றி. சாதிய அடக்குமுறைகளும் - ஏற்றத்தாழ்வும் திமுக மட்டுமல்ல, எந்தக் கட்சிக்குள் இருந்தாலும், அது அறவே ஒழிக்கப்பட வேண்டும். அனைவருக்குமான சுயமரியாதையை உறுதி செய்ய, தொடர் பரப்புரை செய்து மக்களிடையே விழிப்புணர்வு





ஏற்படுத்தி வருகிறது திமுக.

ஆட்சி பொறுப்பேற்கும் போதெல்லாம் சட்டங்களாகவும் திட்டங்களாகவும் 'சமூக நீதி'யை அரியணை ஏற்றி, அரசியல் தளத்தில் தொடர்ந்து போராடி வருகிறது திமுக அரசு. அண்ணா - கருணாநிதி வழியில் எங்கள் கட்சித் தலைவரும் இப்பணியைத் தொடர்கிறார்.

'பராசக்தி'யில் தொடங்கி 'மாமன்னன்' வரை கலை வடிவங்களிலும் 'சமூகநீதி'யைத் தொடர்ந்து உயர்த்திப் பிடித்து வருகிறோம்.

ஆயிரமாயிரம் ஆண்டு கால சனாதனத்துக்கு எதிராக, சமத்துவம் காண போராடும் நூறாண்டு கால போராட்டம் இது. இன்னும் முழுமை பெறாத போராட்டமும் கூட. ஒரே திரைப்படத்தின் மூலம் சமூகத்தில் தலைகீழ் மாற்றத்தை நிகழ்த்திவிட முடியாது என்பதையும் நாம் அனைவரும் அறிவோம். பெரியார் - அம்பேத்கர் வழியில் மக்களுடன் தொடர்ந்து உரையாடி இம்மாற்றத்தை நிகழ்த்த முடியும். அதைநோக்கி நாம் அனைவரும் ஒன்றிணைந்து பயணிப்போம். இப்பயணத்தில் திமுக மீதும் என் மீதும் இப்போது நம்பிக்கை கொண்டிருக்கும் சகோதரர் ரஞ்சித்துக்கு நன்றி" என பதிவிட்டுள்ளார்.

## பொள்ளாச்சியில் கழக மாநாட்டு தீர்மான விளக்கப் பொதுக்கூட்டம்




கோவை மாவட்டம், பொள்ளாச்சியில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில், இது தமிழ்நாடு இளம் தலைமுறையின் எச்சரிக்கை மாநில மாநாட்டின் விளக்கப் பொதுக்கூட்டம், திருவள்ளுவர் திடலில் மடத்துக்குளம் மோகன் நினைவு மேடையில், 24.06.2023 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெற்றது.

இந்நிகழ்வின் தொடக்கமாக கோவன் தலைமையிலான ம.க.இ.க மய்யம் தோழர்களின் புரட்சிகரப் பாடல்களுடனும், கண்ணையா திவிக-விற்கு என்று அவரே எழுதிய பாடலுடன் நிகழ்வுகள் தொடங்கியது.

சபரிகிரி வரவேற்புரையாற்ற, பொள்ளாச்சி நகரமன்ற தலைவர். சியாமளா நவநீதகிருஷ்ணன் வாழ்த்துரை வழங்கினார். அவரைத் தொடர்ந்து மாரிமுத்து மக்கள் விடுதலை முன்னணி, தி.செ.கோபால் ஆதித்தமிழர்பேரவை, வானுகன் தமிழ்ப்புலிகள்கட்சி, வழ.சேதுபதி தமிழ்நாடு தன்னுரிமை மீட்பு இயக்கம், ஆகியோரும் வாழ்த்துரை வழங்கினர்.

அதைத் தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி, சுந்தரவள்ளி - த.மு.எ.க.ச, இராஜீவ் காந்தி தலைவர் - திமுக மாணவரணி, காசு. நாகராசன் - அமைப்புச் செயலாளர் - தி.இ.த.பே., இரா.நவநீதகிருஷ்ணன் - நகரசெயலாளர் - திமுக ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

நிகழ்வானது கோவை மாவட்ட செயலாளர் வே.வெள்ளிங்கிரி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கோவை மாநகரம் : வெங்கட், ஜெயந்த். திருப்பூர்: துரைசாமி, முகில்ராசு,ஆசிரியர் சிவகாமி,மகிழவன்,பாண்டியநாதன், அய்யப்பன்,சிவானந்தம்,கணக்கன். ஆனைமலை : அரிதாசு, அப்பாத்துரை, கணேசு, அனுசுயா, மணி, வினோதினி, நிறைமதி ஆகியோருடன், திராவிட முன்னேற்ற கழகம், திராவிடர் கழகம், திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை, மக்கள் விடுதலை முன்னணி, தமிழ்ப்புலிகள் கட்சி, ஆதித்தமிழர் பேரவை, நல்விடியல் தோழர்களும் திரளாக கலந்து கொண்டனர்.

## ஆனைமலையில் - கழகத் தலைவர் நடத்தி வைத்த திருமணம்



பொன்னமராவதி திராவிடர் கழக அமைப்புச் செயலாளர் ஆறுமுகம் - அமுதா ஆகியோரது மகன் அ.ஆ.பாலச்சந்தர் (எ) இனியவன், ஆனைமலை வெல்ஃபேர் கட்சி மாநில துணைத் தலைவர் மணிமாறன் - திலகவதி ஆகியோரது மகள் ம.தி.புனிதா ஆகியோரது " வாழ்க்கை இணை ஏற்பு விழா" ஆனைமலையில் 25.06.2023 ஞாயிறு அன்று நடைபெற்றது.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது.

ம.தி. பிரபு அம்பேத்கர் வரவேற்புரை ஆற்றினார். இரா அதியமான், நிறுவனத் தலைவர் - ஆதித் தமிழர் பேரவை. கே.எஸ். அப்துல் ரஹ்மான், மாநிலத் தலைவர் - வெல்ஃபேர் கட்சி. பேராசிரியர் சுந்தரவள்ளி, த.மு.எ.க.ச. சி.விசயராகவன், பெரியாரியல் சிந்தனையாளர். காசு.நாகராசன், அமைப்பு செயலாளர் - தி.இ.த.பே. இரா.கருப்புச்சாமி, கல்வி உரிமைக்கான மேம்பாட்டு மையம். முகமது கவுஸ், மாநில செயலாளர் - வெல்ஃபேர் கட்சி. ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

கழகத் தோழர் ம.ஏ. இளங்கோவன் நன்றி கூறினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP    Posted : July 07, 2023

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran